எப்போதும் ஆட்சி செய்யும்! நீங்கள் ஒருபோதும் துன்பத்தை, அநீதியை, வறுமையை அனுபவிக்க தேவையில்லை.

கடவுளின் இத்தகைய ஆழ்ந்த அன்பை நீங்கள் அறிந்து கொள்வதோடு, அவருக்கு நீங்கள் எவ்வளவு முக்கியம் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்! அவர் எப்போதும் உங்களுடன் இருக்கிறார் என்று நம்புங்கள்! அவருடன் சேர்ந்து மகிழ்ச்சியான வாழ்வை அனுபவியுங்கள். கடவுளை, மனிதகுலத்தின் மீதான அவரது அன்பை, மற்றும் உங்கள் வாழ்க்கைக்கான அவரது திட்டங்களைப் பற்றி மேலும் வேதாகமப் புத்தகத்தை படித்து அறியுங்கள்!

இயேசு, இங்கேயும், இப்போதும், எங்கெங்கும், என்றென்றும் உங்கள் வாழ்க்கையின் முக்கிய பகுதியாகி விட விரும்புகிறார். அவர் உங்கள் இதய வாசலின் முன் நிற்கிறார்! நீங்கள் மனக்கதவை திறந்து அவரை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள காத்திருக்கிறார். (வெளிப்படுத்துதல் 3:20 ஐப் பார்க்கவும்.)

இந்த பிரார்த்தனையை மனப்பூர்வமாக செய்தால் அது முடியும்: “இயேசுவே, என் எல்லா பாவங்களையும் மன்னியுங்கள். நீங்கள் எனக்காக மரித்தீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் என் மனக் கதவை திறந்து உங்களை என் வாழ்க்கையில் பங்கேற்க வேண்டும் என்று அழைக்கிறேன்! தயவு செய்து உங்கள் அன்பினாலும் பரிசுத்த ஆவியினாலும் என்னை நிரப்புங்கள்! உம்மைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள எனக்கு உதவுங்கள்! சத்தியப் பாதையில் என்னை வழிநடத்துங்கள். ஆமென்!”

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.




எப்போதும் ஆட்சி செய்யும்! நீங்கள் ஒருபோதும் துன்பத்தை, அநீதியை, வறுமையை அனுபவிக்க தேவையில்லை.

கடவுளின் இத்தகைய ஆழ்ந்த அன்பை நீங்கள் அறிந்து கொள்வதோடு, அவருக்கு நீங்கள் எவ்வளவு முக்கியம் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்! அவர் எப்போதும் உங்களுடன் இருக்கிறார் என்று நம்புங்கள்! அவருடன் சேர்ந்து மகிழ்ச்சியான வாழ்வை அனுபவியுங்கள். கடவுளை, மனிதகுலத்தின் மீதான அவரது அன்பை, மற்றும் உங்கள் வாழ்க்கைக்கான அவரது திட்டங்களைப் பற்றி மேலும் வேதாகமப் புத்தகத்தை படித்து அறியுங்கள்!

இயேசு, இங்கேயும், இப்போதும், எங்கெங்கும், என்றென்றும் உங்கள் வாழ்க்கையின் முக்கிய பகுதியாகி விட விரும்புகிறார். அவர் உங்கள் இதய வாசலின் முன் நிற்கிறார்! நீங்கள் மனக்கதவை திறந்து அவரை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள காத்திருக்கிறார். (வெளிப்படுத்துதல் 3:20 ஐப் பார்க்கவும்.)

இந்த பிரார்த்தனையை மனப்பூர்வமாக செய்தால் அது முடியும்: “இயேசுவே, என் எல்லா பாவங்களையும் மன்னியுங்கள். நீங்கள் எனக்காக மரித்தீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் என் மனக் கதவை திறந்து உங்களை என் வாழ்க்கையில் பங்கேற்க வேண்டும் என்று அழைக்கிறேன்! தயவு செய்து உங்கள் அன்பினாலும் பரிசுத்த ஆவியினாலும் என்னை நிரப்புங்கள்! உம்மைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள எனக்கு உதவுங்கள்! சத்தியப் பாதையில் என்னை வழிநடத்துங்கள். ஆமென்!”

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.



வாழ்க்கையை வாழ்வது கடினமானது!  அதைப் பற்றி எந்த கேள்வியும் இல்லை. ஆகையால்,நல்லதோ கெட்டதோ எல்லா நேரங்களிலும்,  உங்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் உதவக்கூடிய நண்பர் ஒருவர் இருக்கிறார்.

இவரை பற்றி வேதாகமத்தில்,"துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாய் இருந்தார்“ என்று விவரிக்கப்பட்டுள்ளது (ஏசாயா 53:3) –மிகப் பெரும் துன்பங்களை சகித்தவர் இவர்! உங்கள் உடல் மற்றும் மன வலியை புரிந்து கொள்பவர். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து நீங்கள் விரும்பும் நண்பராக, உங்கள் நம்பிக்கைக்கு உரியவராக, ஒரு வழிகாட்டியாக, ஒரு ஆசிரியராக உள்ளார்!

" தேவன் அன்பாகவே இருக்கிறார்"என்று வேதாகமம் கூறுகிறது(1 யோவான் 4:8). அவருடைய அன்பு முடிவற்றது! அது எல்லையில்லா அன்பு!  உயர்ந்த மலைகளை விட உயரமானது! ஆழம் மிகுந்த கடல்களை விட ஆழமானது. அது எங்கும் எப்போதும் எதிலும் பரவி இருக்கிறது! இது ஒரு அருமையான அன்பு! அதை நாம் முழுமையாக புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மிக பெரியது.

இந்த மகத்தான அன்பை நாமும் அனுபவிக்க வேண்டும் என்று கடவுள் விரும்பியதால், அவர் தம் ஒரே மகனாகிய இயேசுவை பூமிக்கு அனுப்பினார். நம்மைப் போலவே வாழ்ந்தாலும்,கஷ்டங்களை அனுபவித்தாலும், இயேசு மனிதனாகவும், மனித உருவில் கடவுளாகவும் இருந்தார்.

அவர் சிலுவையில் மரணம் அடைந்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திலுள்ள தம் தந்தையிடம் திரும்பியபோது பூமியில் அவருடைய பணி முடிவடைந்தது. நம்முடைய பாவங்களைத் தம்மீது சுமந்து கொண்டு நம்மை மீட்பதற்காக, நமக்காக மரணத்தையும் ஏற்று மாபெரும் தியாகத்தை செய்ய அவர் தயாராக இருந்தார். நாம் பாவமன்னிப்பு பெறவும், தேவனாகிய தந்தை நம் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை நாம் அறியவும் இயேசுபிரான் இதைச் செய்தார்.

"ஏனெனில், தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி  இவ்வளவாய்(அந்த அளவுக்கு), உலகத்தில் அன்பு கூர்ந்தார்! (உங்களையும் என்னையும் நேசித்தார்)" (யோவான் 3:16).

இயேசு உங்களை தனிப்பட்ட முறையில் அறிவார். உங்கள் பெயர் அவருக்குத் தெரியும். உங்கள் பிரச்சனைகள் மற்றும் மனவேதனைகள் அனைத்தையும் அவர் அறிந்திருக்கிறார்! அவர் உங்களுக்கு உதவ விரும்புகிறார். நீங்கள் கேட்டால், இந்த வாழ்க்கையில் நீங்கள் படும் கஷ்டங்கள், சவால்கள், பிரச்சனைகள், இழப்புகள் மற்றும் சோகங்கள் அனைத்தும் தாமே ஏற்று, உங்களுடன் வழி நடப்பார். நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும், அவர் தரும் ஆறுதலையும் நம்பிக்கையையும் நீங்கள் அனுபவிக்க முடியும்.

நீங்கள், உங்கள் இதயத்தைத் திறந்து, அவரை உங்கள் வாழ்க்கையின் முக்கிய அங்கமாக ஏற்றுக் கொண்டால், அவர் இந்த வாழ்க்கையை நீங்கள் வழிநடத்த உங்களுக்கு உதவுவார். எவ்வளவு கடினங்கள் இருந்தாலும், உங்களுக்கு உடனுக்குடன் உதவ அவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! கடவுள், நீங்கள் எதிர்கொள்ளும் கெட்ட விஷயங்களை முழுதுமாய் அகற்றுவதில்லை, ஆனால் ஒவ்வொரு கஷ்டத்திலும் அவர் உங்களுக்கு  துணையாக இருப்பார்!

இந்த வாழ்க்கை முடிவடைந்ததும், நீங்கள் அவருடன் பரலோகத்தில் அடுத்த வாழ்க்கையை தொடர்ந்து நடத்த முடியும்! அங்கு நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்வீர்கள். அன்பும், நீதியும், அங்கு

வாழ்க்கையை வாழ்வது கடினமானது!  அதைப் பற்றி எந்த கேள்வியும் இல்லை. ஆகையால்,நல்லதோ கெட்டதோ எல்லா நேரங்களிலும்,  உங்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் உதவக்கூடிய நண்பர் ஒருவர் இருக்கிறார்.

இவரை பற்றி வேதாகமத்தில்,"துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாய் இருந்தார்“ என்று விவரிக்கப்பட்டுள்ளது (ஏசாயா 53:3) –மிகப் பெரும் துன்பங்களை சகித்தவர் இவர்! உங்கள் உடல் மற்றும் மன வலியை புரிந்து கொள்பவர். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து நீங்கள் விரும்பும் நண்பராக, உங்கள் நம்பிக்கைக்கு உரியவராக, ஒரு வழிகாட்டியாக, ஒரு ஆசிரியராக உள்ளார்!

" தேவன் அன்பாகவே இருக்கிறார்"என்று வேதாகமம் கூறுகிறது(1 யோவான் 4:8). அவருடைய அன்பு முடிவற்றது! அது எல்லையில்லா அன்பு!  உயர்ந்த மலைகளை விட உயரமானது! ஆழம் மிகுந்த கடல்களை விட ஆழமானது. அது எங்கும் எப்போதும் எதிலும் பரவி இருக்கிறது! இது ஒரு அருமையான அன்பு! அதை நாம் முழுமையாக புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மிக பெரியது.

இந்த மகத்தான அன்பை நாமும் அனுபவிக்க வேண்டும் என்று கடவுள் விரும்பியதால், அவர் தம் ஒரே மகனாகிய இயேசுவை பூமிக்கு அனுப்பினார். நம்மைப் போலவே வாழ்ந்தாலும்,கஷ்டங்களை அனுபவித்தாலும், இயேசு மனிதனாகவும், மனித உருவில் கடவுளாகவும் இருந்தார்.

அவர் சிலுவையில் மரணம் அடைந்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திலுள்ள தம் தந்தையிடம் திரும்பியபோது பூமியில் அவருடைய பணி முடிவடைந்தது. நம்முடைய பாவங்களைத் தம்மீது சுமந்து கொண்டு நம்மை மீட்பதற்காக, நமக்காக மரணத்தையும் ஏற்று மாபெரும் தியாகத்தை செய்ய அவர் தயாராக இருந்தார். நாம் பாவமன்னிப்பு பெறவும், தேவனாகிய தந்தை நம் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை நாம் அறியவும் இயேசுபிரான் இதைச் செய்தார்.

"ஏனெனில், தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி  இவ்வளவாய்(அந்த அளவுக்கு), உலகத்தில் அன்பு கூர்ந்தார்! (உங்களையும் என்னையும் நேசித்தார்)" (யோவான் 3:16).

இயேசு உங்களை தனிப்பட்ட முறையில் அறிவார். உங்கள் பெயர் அவருக்குத் தெரியும். உங்கள் பிரச்சனைகள் மற்றும் மனவேதனைகள் அனைத்தையும் அவர் அறிந்திருக்கிறார்! அவர் உங்களுக்கு உதவ விரும்புகிறார். நீங்கள் கேட்டால், இந்த வாழ்க்கையில் நீங்கள் படும் கஷ்டங்கள், சவால்கள், பிரச்சனைகள், இழப்புகள் மற்றும் சோகங்கள் அனைத்தும் தாமே ஏற்று, உங்களுடன் வழி நடப்பார். நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும், அவர் தரும் ஆறுதலையும் நம்பிக்கையையும் நீங்கள் அனுபவிக்க முடியும்.

நீங்கள், உங்கள் இதயத்தைத் திறந்து, அவரை உங்கள் வாழ்க்கையின் முக்கிய அங்கமாக ஏற்றுக் கொண்டால், அவர் இந்த வாழ்க்கையை நீங்கள் வழிநடத்த உங்களுக்கு உதவுவார். எவ்வளவு கடினங்கள் இருந்தாலும், உங்களுக்கு உடனுக்குடன் உதவ அவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! கடவுள், நீங்கள் எதிர்கொள்ளும் கெட்ட விஷயங்களை முழுதுமாய் அகற்றுவதில்லை, ஆனால் ஒவ்வொரு கஷ்டத்திலும் அவர் உங்களுக்கு  துணையாக இருப்பார்!

இந்த வாழ்க்கை முடிவடைந்ததும், நீங்கள் அவருடன் பரலோகத்தில் அடுத்த வாழ்க்கையை தொடர்ந்து நடத்த முடியும்! அங்கு நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்வீர்கள். அன்பும், நீதியும், அங்கு